REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 13உ செவ்வாய் (29—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 14உ புதன் (30—11—55) [இதழ் 143

வடநாட்டில் மேலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை

மேல் அசாம் பகுதியில் இன்னும் எண்ணெய்க் கிணறுகள் இருப்பது கண்டுபிடிக்கப்படுமானால்,இங்கு மேலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை துவக்கப்படும் என்று அசாம் எண்ணெய் 'கம்பெனி'யார் தெரிவித்திருக்கின்றனர்.

பூரண பரிசோதனைக்குப் பின்புதான் எவ்வளவு 'க்ரூட்' எண்ணெய் கிடைக்கும் என்று கணக்கிட முடியும் என்றும் இப்போது பூர்வாங்க பரிசோதனைகள் மட்டும் நடந்திருக்கிறது என்றும், திக்பாய் நகரில் உள்ள அசாம் எண்ணெய் நிறுவனத்தார் தெரிவித்திருக்கின்றனர்.

தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

ஐதராபாத் போலீசார் இருவரைப் பலி கொண்டனர்!

மேலும் பலருக்குக் காயம்

இருபது நாட்களாக நடைபெறும் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

ஐதராபாத், நவ. 28—

நிசாமாபாத் மாவட்டத்தில் உள்ள ஷகாரா நகரில், கடந்த 20 நாட்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் மீது இன்று போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இரண்டு தொழிலாளர்களின் உயிரைக் குடித்திருக்கின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தால் மேலும் பல தொழிலாளர்கள் காயமுற்றனராம்.

தொழிற்சங்கத்தில் தொடர்புடைய தொழிலாளர்கள் சிலர் போலீசாருடன் இன்று மோதிக்கொண்டதாயும், அதனால் ஆறு போலீசார் காயமடைந்ததாயும், அதைத் தொடர்ந்து நிலை கட்டுக்கடங்காது போய்விடவே தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.

விபரமான தகவல்கள் எதுவும் உடனடியாகக் கிடைக்கவில்லை.

நடைபெற்று வரும் வேலை நிறுத்தம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று மாநில சட்டசபையில் எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் ஒரு பிரரேபணை கொண்டுவந்தார். ஆனால்,தொடர்புடையோரிடையே பேச்சு வார்த்தை நடத்தி சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சர்க்கார் உறுதி மொழி அளித்ததின் பேரில் அந்தப் பிரரேரணை திரும்பப் பெறப்பட்டது என்று தெரிகிறது.

நிலவில் நிலம் வாங்க போட்டி?

ஏகர் 5 ரூபாயாம்! 4,500 பேர் வாங்கியுள்ளனராம்!

சந்திர மண்டலத்தைச் சொந்தம் கொண்டாடுகிறார் ஒரு அமெரிக்கர்

நிலவில் உள்ள நிலத்தை வாங்குவதற்கென அமெரிக்காவில் பெரும் போட்டி ஏற்பட்டிருக்கிறதாம்.

ராபர்ட் கோல்ஸ் என்பார், 5 ரூபாய்க்கு ஒரு ஏகர் வீதம், சந்திர மண்டலத்திலுள்ள நிலப் பரப்பை விற்றுவருகிறாராம். அந்த நிலப் பரப்பில் மீன் பிடிக்கவும் விளையாடவும் அனுமதி வழங்கப்படும் என்ற உறுதிமொழியும் தருகிறாராம்.

இதுவரை இவரது இந்தக் கூற்றை நம்பி 4,500 பேர் நிலம் 'வாங்கி'யுள்ளனராம்.

மக்கள் சிறு தொகைகளுக்காக ஏமாற்றப்படுகின்றனர் என்பதால் அதனைத் தடுக்கும் பொருட்டு, இந்த விஷயம் பரிகாசத்திற்குரியது என்றாலும், அந்த ராபர்ட் கோல்ஸ் என்பாரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க போலீசார் முற்பட்டிருக்கின்றனர்.

அகில மண்டல அபிவிருத்தி நிறுவனம் என்று கூறப்படும் ஒரு இயக்கத்தின் தலைவராக இவர் இருந்து வருகிறாராம்.

இவர் தனக்குத்தான் சந்திர மண்டலம் முழுவதும் சொந்தம் என்று கூறியிருக்கிறாராம்.

அவர் தன்மீது தொடரப்பட்டுள்ள வழக்கிற்கு எதிராக வாக்கு மூலம் தருகையில், 'என்றாவது ஒருநாள் சந்திரமண்டலத்திற்கு பூமியிலிருந்து மனிதன் செல்லத்தான் போகிறான்; அப்படியிருக்கும்போது, ஏன் ஒருவர், அந்த மண்டலத்தைச் சொந்தம் கொண்டாடக் கூடாது?' என்று கேட்கிறாராம்.

கையாடிய பணத்தைத் திரும்பத் தருகிறார் டால்மியா!

புதுடில்லி, நவ 28—

இராமகிருஷ்ண டால்மியா, பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 1·80 கோடி திரும்பத் தந்து விடுவதாக தாமாகவே முன் வந்து தெரிவித்தார்.

அவர் தரும் தொகையைப் பெற்றுக்கொள்வது என்று, பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன நிர்வாகி முடிவு செய்திருக்கிறார்.

பணத்தைத் திரும்பத் தருவதாக டால்மியா கடந்த நவம்பர் 12-ந் தேதியன்று தெரிவித்தார்; 17-ந் தேதியன்று, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முன்பு எஸ். பி. ஜெயின் என்பார், டால்மியாவிற்காக இந்தத் தொகையைக் கட்டி விடுவதாகக் கூறினார்; ஆனால், 'நிறுவனத்திலிருந்து பணத்தை மோசடி செய்தவரே அந்தத் தொகையைக் கட்டவேண்டும்,' என்று கூறி அப்போது நிராகரிக்கப்பட்டது; இப்போது டால்மியாவே அந்தத் தொகையைத் தருவதால், தொகை ஏற்றுக்கொள்ளப்படுகிறது

இந்தத் தகவலை, நிதி மந்திரி சிந்தாமண் தேஷ்முக் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவிற்கு வருகை தந்த உல்லாசப் பிரயாணிகள்!

1954-ம் வருடத்தில் இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் எண்ணிக்கை 39,333, 1951-ல் இந்த எண்ணிக்கை 20,000.

இந்தியாவில் நெல் சாகுபடி

மதிப்பீட்டின் விவரம்

புதுடில்லி, நவ. 28—

இந்த ஆண்டில், இந்தியா முழுமையிலுமாக மொத்தம் 6,59,16,000 ஏகர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக, 1955—56-ம் ஆண்டில் இந்தியாவின் நெல் சாகுபடி பற்றித் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்திந்திய முதல் மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது.

1954—55-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட முதலாவது மதிப்பீட்டின்படி, மொத்தம் 6,25,42,000 ஏகர் நிலத்தில்தான் சாகுபடி செய்யப்பட்டது.

மொத்தத்தில் சென்ற ஆண்டைவிட, இவ்வாண்டில், சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு 33,74,000 ஏகர்—அதாவது 5·4 சத விகிதம் அதிகரித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

கோவைக்கு முதலிடம்!

சென்னை மாநிலத்தில் அதிகப்படியான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்துவதில் கோவை மாவட்டம்தான் முதலிடம் பெறுகிறது.

கோவை மாவட்டத்தில் 47,061-நிகழ்ச்சிகளும், சென்னையில் 39,777 நிகழ்ச்சிகளும், சேலம் மாவட்டத்தில் 36,627 நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளனவாம்.

1954-55ம் ஆண்டில், சென்னை மாநிலத்தில் மொத்தம் 3,67,342-நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 548-நிகழ்ச்சிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன

சென்ற வருடம் 3,22,679-நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவைகளின் மூலம் மொத்தத்தில் ரூ 75,81,199 'கேளிக்கை வரி'யாகக் கிடைத்துள்ளதாம்.

அகாலி தளத்தவருடன் மகா பஞ்சாப் முன்னணியினர் மோதுதல்

போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

அமிருதசரஸ், நவ. 28—

பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டும் என்று கோரும் அகாலிதளத்தவரும், பஞ்சாப்—பெப்சு—இமாசலப்பிரதேசம் இவற்றை இணைத்து ஒரு மகாபஞ்சாப் மாநிலம் அமைக்கவேண்டும் என்று கோருவோருக்கும் இடையே இன்று மோதுதல் ஏற்பட்டபோது, போலீசார் நிலையைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனராம்.

ஒரு போலீசார் உட்பட மூன்று பேர் படுகாயமுற்றனர் என்றும், அவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது; மேலும் பலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டனவாம்.

மோதிக்கொண்ட இருசாராரும், கல், தடி 'ஹாக்கி' பந்தடி மட்டைகள் ஆகியவற்றை வெகு தாராளமாக உபயோகித்துக்கொண்டனராம்.

போலீசார் மூன்று முறை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து, இரு சாராரையும் கலைந்துபோகச் செய்தனராம்.

அமிர்தசரஸ் மகாபஞ்சாப் முன்னணியின் தலைவரான முனிலால் என்பாரை போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

'இந்தியர்கள் மீதல்ல - தமிழர்கள் மீதுதான் தாக்குதல்'!

இலங்கை சம்பவம் குறித்து நேருவின் தகவல்

"இலங்கையில் அண்மையில் இந்தியர்கள் கடைகள் மீது நடைபெற்ற தாக்குதல் இந்தியர்கள்மீது, அவர்கள் இந்தியர்கள் என்பதற்காக நடத்தப்படவில்லை என்றும், ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு விரோதமான தாக்குதல்தான் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கலகக்காரர்கள் கலவரம் செய்ய முற்பட்டபோது இந்தியர்களுக்குச் சொந்தமான கடைகள் மட்டுந்தான் திறந்திருந்தன,"

என்று, பிரதமர் நேரு, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

சென்ற அக்டோபர் 12-ந் தேதி கொழும்புவில் நடந்த கலவரங்களின்போது இந்தியர்களின் கடைகள் சூறையாடப்பட்டதன் காரணங்களைப் பற்றி எம். எல். திவிவேதி, எம். எல். அகர்வால் ஆகியோர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுவிட்டு, மேலும், சில தகவல்களைத் தந்திருக்கிறார்.

"தமிழும், சிங்களமும் சமமாகக் கருதப்பட வேண்டுமென்று கோருவதற்காக கொழும்பு நகர மண்டபத்தில் கம்யூனிஸ்டு கட்சியினரால் நடத்தப்பட்ட கூட்டத்தைப் பின்தொடர்ந்து கலவரம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தமிழ் எதிர்ப்புக் குழுவினர், கூட்டத்தைக் கலைக்க முதலில் முயற்சி செய்தனர்; பின்னர் நகர மண்டபத்துக்கு அருகாமையிலுள்ள சாலை வழியாகக் கூட்டமாகச் சென்று இந்தியத் தமிழர்களுக்குச் சொந்தமான சில கடைகளைத் தாக்கினார்கள். இச்சம்பவத்தில் 10 கடைகள் பாதிக்கப்பட்டன. இரண்டு கடைகள் தவிர, மற்றவற்றுக்குச் சேதம் அதிகம் இல்லை என்று கூறப்படுகிறது. சேதத்தின் அளவு திட்டமாக இன்னும் தெரியவில்லை; உயிர்ச் சேதம் ஏதுமில்லை," என்று தெரிவித்தார்.

இதே தகவலை, இந்திய வெளிவிவகார இலாகா பார்லிமெண்டரி செயலாளர் திருமதி லட்சுமி மேனன், எம். கோவிந்த ரெட்டி என்பாரது கேள்விக்குப் பதிலளிக்கும்போதும் தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் பி. வரதராஜுலு பிறந்த நாள் விழா

சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

சென்னை, நவ 28—

பிரபல தேச பக்தர் டாக்டர் பி. வரதராஜுலு (நாயுடு) அவர்களின் 68-வது பிறந்த நாள் விழா இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு முதன் மந்திரி காமராசர் தலைமை தாங்கினார்.

பெரியார் ஈ. வெ. இராமசாமி, சர்தார் கே. எம். பணிக்கர், டாக்டர் வி. கே. ஜான், தண்டபாணி பிள்ளை, எம். ஏ. முத்தையா செட்டியார், ஆர். வி. கிருஷ்ண ஐயர், எச். டி. ராஜா, அப்துல் கரீம், பவானி சங்கர், கே. ஏ. மதியழகன் ஆகியோர் அந்த விழா

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 29—11—'55 செவ்வாய்

புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுமா?

மாநிலப் புது அமைப்புக் குழுவினர், இந்தியத் துணைக் கண்டத்து மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்காக, இடத்திற்கு இடம் வேறுபட்ட—முரண்பட்ட அடிப்படையை மேற்கொண்ட தவறின் விளைவுகளுள் ஒன்றாக, பம்பாயின் எதிர்காலத்திற்காக நடைபெறும் கலவரங்களைக் கொள்வதில் தவறில்லை.

'பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டிய மாநிலம் அமைக்க வேண்டும்' என்ற மராட்டியரின் கோரிக்கையே, குழுவினர் நிராகரித்ததற்குக் காட்டியுள்ள காரணங்களுள் போதுமான நியாயமிருக்கவில்லை. குழுவினரின் அந்த நியாயமற்ற போக்கையே காங்கிரஸ் மேலிடமும் மாநில எல்லைகளைத் திருத்தி அமைப்பதற்கு மேற்கொண்டது வருந்தத்தக்க ஒன்றாகும்.

பம்பாய் எதிர்காலம் குறித்து காங்கிரஸ் மேலிடத்தின் முடிவுதான் கடந்த கிழமை பம்பாயில் நடைபெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்களுக்குக் காரணம் என்பதை விளக்கி, அந்தச் சம்பவங்களின் கொடிய விளைவுகளுக்குக் காங்கிரஸ் மேலிடமே பொறுப்பு என்றும் அப்போதே எழுதியிருந்தோம்.

இந்தக் கிழமை துவக்கத்தில், மீண்டும் பம்பாய் நகரில் குழப்பம் ஏற்பட்டதாயும், போலீசார், நிலைமையைச் சமாளிக்கவென்று கூறி கண்ணீர்ப் புகைக் குண்டு, குண்டாந்தடி இவற்றின் துணையை நாடினர் என்றும் செய்தி வெளிவந்திருக்கிறது.

இந்தச் சம்பவங்கள், காங்கிரஸ் மேலிடம் பம்பாய் குறித்த தனது முடிவை மீண்டும் பரிசீலிக்கத் தூண்டுவதாயமைய வேண்டும் என்பது நமது விருப்பமாகும்.

பல மொழி வழங்கும் மக்களைக் கொண்ட இந்தியா போன்ற ஒரு பெரும் துணைக் கண்டத்தின் மாநில எல்லைக் கோடுகளை நிர்ணயிப்பதற்கு, எல்லாமக்களும் பொதுவாகஒப்புக்கொள்ளக்கூடிய மொழிவழி மாநில அமைப்பு என்ற அடிப்படையை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளாத தவறை, மாநில புது அமைப்புக் குழுவினரைத் தொடர்ந்து காங்கிரஸ் மேலிடமும் வேண்டும் என்றே செய்திருப்பதின் பலாபலன்களை, இப்போதில்லாவிடினும் குறுகிய எதிர்காலத்தில் காங்கிரசாரே உணரத்தான் போகின்றனர்.

பம்பாய் சம்பவங்கள் காங்கிரஸ் மேலிடத்தின் தவறைச் சுட்டிக்காட்டுவனவாயிருக்கின்றன; 'இன்னும் காலம் தாழ்ந்துவிடவில்லை — மீண்டும் பரிசீலிக்கலாம்' என்ற எதிரொலியைத்தான், பம்பாய் கலவரங்கள் முழக்குகின்றன.

காங்கிரஸ் மேலிடம், இந்த எதிரொலியைப் புரிந்துகொண்டு, தனது தவறான போக்கைத் திருத்திக்கொள்ளுவதில் காலந்தாழ்த்துவதோ, அல்லது, தனது தவறை நிலைநாட்ட போலீஸ், இராணுவ பலம் போதும்—என்று எண்ணுவதோ, பம்பாயைப் பொறுத்து விபரீதமானவிளைவுகளை விலைக்கு வாங்குவதாயிருக்கும்.

காங்கிரஸ் மேலிடம், தனது முடிவை, மக்கள் சபையில் உள்ள தனது பெரும்பான்மை பலத்தால், சட்டமாக்கி வலுக்கட்டாயமாக மராட்டியர் மீது அதனைத் திணிக்க முற்படுமானால், யானை தன் தலையில், தானே மண்ணைவாரிப் போட்டுக்கொண்ட கதையாகத்தான் இருக்கும்.

'பம்பாய் மராட்டியருக்கில்லை' என்ற முடிவு நிரந்தரமானால், பம்பாய்க்கு வெளியே உள்ள மராட்டியரிடையேயும், ஆயுதத்தின் துணையால் ஓரளவு அமைதியை நிலைநாட்டிவிடலாம்; ஆனால், பம்பாய்க்குள் வாழும் மராட்டியரிடை அமைதியை நிலைநிறுத்த, எத்தனை வலிமையான ஆயுதமும் பயனற்றதாகவே இருக்கக்கூடும்.

பம்பாயுடன் கூடிய சம்யுக்த மராட்டியக் கோரிக்கைக்காக கிளர்ச்சியில் ஈடுபடுவோர், சில பல நேரத்தில் விரும்பத்தகாத முறையில் நடந்துகொள்வதை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆனால், காங்கிரஸ் மேலிடத்தின் முடிவும், ஆட்சியிலிருப்போரின் ஆணவப் போக்கும் அவர்கள் உள்ளத்தில் கொந்தளிப்பையும் அச்சத்தையும், மூட்டியிருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்வதைத் தவிர இந்நிலைகளின் மூலகாரணவான்களுக்கு வேறு வழி இருக்க முடியாது.

'பம்பாய் மராட்டியர்களுக்கில்லை' என்பதினால் விளையும் கேடுகளை பம்பாயில் உள்ள இதர சிறுபான்மை மக்கள் தான் தினம் தினம் அநுபவிக்க வேண்டியவர்களாவர் என்பதையும் காங்கிரஸ் மேலிடம் நினைவு கூர்வது அவசியம்.

வெள்ளம் வருமுன் அணை போடுவது — வருமுன் காப்பது புத்திசாலிகளுக்கு அடையாளம். காங்கிரஸ் மேலிடத்தவர் புத்திசாலிகள் தான் என்று தங்களை மராட்டிய மக்கள் கருதச் செய்ய வேண்டுமானால், அவர்களிடத்தில் மேலோங்கி நிற்கும் ஆணவ சற்று கீழிறங்கியாக வேண்டும். காங்கிரஸ் மேலிடம் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுமா?—அல்லது முட்டிவிட்டுக் குனியப் போகிறதா என்பதைப் பொறுத்துப் பார்க்கலாம்.

10-இலட்சம் பேர் நன்மைபெறுகின்றனர்!

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் படி இப்பொழுது தொழிற்சாலை வேலையாட்கள் சுமார் 10 இலட்சம் பேர் நன்மை அடைந்துவருகிறார்கள்.

மாநிலப் புனரமைப்பு அறிக்கை விவாத அரங்கில் கே. ஏ. மதியழகன் பேச்சு

சென்னை, நவ. 28—

"இங்கு பேசிய மேல் சட்ட சபை துணைத் தலைவர் டாக்டர் வி. கே. ஜான் அவர்கள், சில பொதுப்படையான கருத்துக்களைச் சொன்னார். கேட்பதற்கு அவை மிகவும் இனிமையாக இருந்தன. அந்த இனிமையான கருத்துரைகள் இன்று தேவைப்படுவது—வடக்கே ஆட்சிப் பீடத்திலே உள்ளவருக்குத்தான். டாக்டர் ஜான், அநுபவம் படைத்த வழக்கறிஞர். வக்கீல் பாணியிலே குறிப்பிட்டார்—'சுப்ரீம் கோர்ட் நீதிபதி சொன்னால் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது நியதிபோல், இந்த நிபுணர் குழு அறிக்கையையும் குற்றம் சொல்லாது எடுத்துக்கொள்ள வேண்டும்; எதிலேயும்தான் சிறிது குற்றம் இருக்கும்' என்று. டாக்டர் ஜான் அவர்களுக்கு அது சாத்தியம்தான். ஏனென்றால், அவர் வக்கீல் இடத்திலே நின்று பேசுகிறார். ஆனால், துர்ப்பாக்கியம் நிறைந்த இந்த நாட்டு மக்களோ, குற்றவாளிக் கூண்டிலே இருந்து, 'இந்த நீதிபதி சொல்வது நியாயமா?' என்று கேட்கிறார்கள். நீதிபதிகள் என்பதாலேயே அவர்கள் கூறும் தீர்ப்பு நியாயமாக இருக்கும் என்பதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். அதுதான் நிலைமை விளக்கம். 'மாகாணப் பித்து, பிரிவினை மனப்பான்மை, குறுகிய மனப்பான்மை எல்லாம் கூடாது' என்றும் அவர் குறிப்பிட்டார். நல்ல கருத்துக்கள்—பாராட்டப்பட வேண்டியவை—உயர்ந்த கொள்கைகள்; ஆனால் இவைகளை, எங்கு—யாருக்குச் சொல்ல வேண்டுமோ அங்கு டாக்டர் ஜான் போன்றவர்கள் சொல்வதில்லை. 'குறுகிய மனோபாவம், மாகாணப் பித்து, வடக்கேதான் இருக்கிறது; அவர்கள் மொழி வெறியர்கள்; நம்மை அந்நியர்களாகப் பாவிக்கிறார்கள்' என்று சொன்னால் டாக்டர் ஜான் கோபித்துக்கொள்வார். சுப்ரீம் கோர்ட் நீதிபதி சொன்னால்தான் அவருக்குப் பிடிக்கும். இங்கே, ஜான் அவர்களின் தலைக்கு மேலே, சுவற்றில், மோகனதாஸ் காந்தியையும், மோதிலால் மைந்தரையும், பாபு இராஜேந்திரரையும், பட்டேலையும், ஆச்சாரியாரையும் படங்களிலே பார்க்கிறோம். 'வடக்கே, முதல் நான்கு படமும் இருக்கும்; ஆனால், கடைசிப் படம் மட்டும் இருக்காது'—என்று நான் சொன்னால் பிடிக்காது. சுப்ரீம் கோர்ட் நீதிபதியே பேசட்டும். பத்து நாளைக்கு முன்பு இதே மைலாப்பூரில் ரானடே ஹாலில் பேசும்போது சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி பதாஞ்சலி சாஸ்திரி, வடக்கேயுள்ள குறுகிய 'மனப்பான்மை'யைக் கண்டித்தார். பாபு இராஜேந்திரர், 'தென்னாட்டார் மீது இந்தி திணிக்கப்படாது' என்று உறுதி கூறினார். அவர் வாய் மூடாததற்கு முன்பே 'புல்கானினுக்கு இந்தியில்தான் வரவேற்புக்கொடுக்க வேண்டும்' என்று தாக்கீது வருகிறது. இவைகளுக்கெல்லாம் என்ன பெயர் கொடுக்கிறார் டாக்டர் ஜான்—எனக்குத் தெரியவில்லை. டாக்டர் ஜான் போன்ற வழக்கறிஞர்கள் இப்படிப்பட்ட சம்பவங்களை எடுத்துக்காட்டி இடித்துரைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,"

—என்று, அண்மையில் மைலாப்பூர் தென் சென்னை இளைஞர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கை பற்றிய விவாத அரங்கில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"எனக்கு முன் பல்வேறு கட்சிகளின் சார்பிலும், அமைப்புகளின் சார்பிலும் பெரியவர்களும், நண்பர்களும் தத்தமது கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளனர். எனக்கு முன்னால் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் பேசிய எனது நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள், 'நான் சொல்லுகிற கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்' என்று திட்டவட்டமாய் குறிப்பிட்டார். அப்படிச் சொல்வதற்காக நான் உங்கள் முன்பு பேசவரவில்லை. நான் கூறப்போகிற கருத்துக்கள் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான கருத்துக்கள்; அந்தக் கருத்துக்களை நீங்கள் நிச்சயமாக ஒத்துக்கொள்ளப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். இன்றைக்கு இல்லாவிட்டாலும்—நாளைக்கு ஒருநாள் நிச்சயமாய் ஒத்துக்கொள்ளப்போகிறீர்கள். காரணம், அவை உண்மை - நியாயம் ஆகியவைகளின் அடிப்படையில் அமைந்தவை. மதிவாணர்கள் நிறைந்த இடம் மைலாப்பூர்; அவர்கள், உண்மைக்கு அப்பால் எத்தனை நாளைக்கு ஒளிந்து கொண்டிருக்க முடியும்? என்னுடைய இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவது போலவே உங்கள் சங்கத்தின் பெயரும் அமைந்துள்ளது. 'சௌத் மெட்ராஸ் யெங் மென்ஸ் அசோசியேஷன்' என்பதை 'சௌமியா' என்று சுருக்கி, இங்கு வளைவுத் துணியாக அலங்கரித்திருக்கிறீர்கள். 'சௌமியா' என்றால் உங்களுக்கு ஒரு அர்த்தத்தைக் குறிக்கிறது; எனக்கு அது வேறோர் அர்த்தத்தையும் நினைவுபடுத்துகிறது. என்னுடைய தலைவர் அண்ணா அவர்கள் எழுத்தோவியங்கள் தீட்டும்போது, அவருக்கு இட்டுக்கொண்ட புனைப் பெயர்களிலே ஒன்று 'சௌமியன்' என்பது; எனவே, அவரது புனைப் பெயரிலே சங்கம் அமைத்துள்ள நீங்கள், அவரது பெயரை இதற்குப் பின்னாலே மறைத்துவைத்திருப்பது போல, அவரது கருத்துக்களையும் உங்கள் உள்ளத்திலே ஒளித்து வைத்திருக்கிறீர்கள் என்பதை உலகம் உணரத்தான் போகிறது.

"இந்தத் துணைக் கண்டத்து மக்கள், 30 ஆண்டுகளாகப் போராடியது மொழிவழி அரசுக்குத்தான்; ஆனால், ஆளவந்தார்கள் அமைத்ததோ—மாநில புனரமைப்புக் குழு! இந்த அடிப்படைக் குற்றம்தான் இவ்வளவு சிக்கலுக்கும் காரணம். மொழிவழி அரசு என்பது வெறும் மொழிப் பாதுகாப்புக்கு மட்டுமல்ல; மொழி வளருவதற்கு என்றால் தமிழுக்கு, அண்ணாமலை பல்கலைக் கழகம் போதும்; தெலுங்கிற்கு ஆந்திரா பல்கலைக் கழகம் போதும் ஆனால் மொழிவழி அரசு என்பது, ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்கள் தங்கள் தேசிய அவாக்களை நிறைவேற்றிக்கொள்ளவும், தங்களது அறிவால், ஆற்றலால் சீராக்கிச் செம்மைப்படுத்தவும் ஓர் குறிப்பிட்ட அரசியல் அமைப்பில் இருக்க வேண்டுமென விரும்பும் இதய எழுச்சிதான். அதனுடைய வெளிப்படை அம்சம் மொழி. இந்த கருத்துக்களை பசில் அலி-பணிக்கர் குழுவிடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சந்தித்து அறிக்கை கொடுத்தபோது குறித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதனை மதிக்க மறுத்ததன் விளைவுகளைத்தான் இன்று நாட்டிலே நாம் காண்கிறோம்.

"மொழிவழி அரசு என்பது, 'தான் கொண்டுள்ள திராவிட முழு விடுதலை என்ற நீண்ட பயணத்தின் முதல்படி' என்று தி. மு. கழகம் கருதுகிறது; எனவே, ஒருவர் உரிமையை ஒருவர் அபகரிக்காதவாறு எல்லைக் கோடுகள் வகுக்க வேண்டுமென்று கருதுகிறது. ஆனால், டில்லியில் வலிமை பொருந்திய ஏகாதிபத்தியத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிலர், ஏகாதிபத்திய பாணியான 'பிரித்தாளும் கொள்கை'யைக் கையாண்டு, ஆந்திரருக்கும்—கன்னடியருக்கும், தமிழருக்கும்— மலையாளிகளுக்கும் மனமாச்சரியம் ஏற்படும் வகையில் காரியங்கள் தூண்டிவிட்டுள்ளனர். அத்தகு சூழ்ச்சிகளில் ஒன்றுதான் தமிழருக்கு உரிமையான தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை கேரளத்துடன் இணைக்கவேண்டுமென்று கூறும் யோசனை.

"தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் வாழும் மக்களில் 75 சதவிகிதத்தினர் தமிழ் பேசுபவர்கள். 100 ஆண்டுகளுக்கு முன்பு, பாம்பும்—தேளும், கள்ளியும்—முள்ளும், களிறும்—காட்டெருமையும், கானும்—கடுங்குளிரும் நிறைந்துள்ள மலைவனாந்திரத்தைத் தங்கள் வியர்வையை — இரத்தத்தைச் சொரிந்து பொன் கொழிக்கும் தேயிலை, இரப்பர் தோட்டங்களாக மாற்றியிருப்பதற்கு சாட்சியம் பகருகிறது—அந்த உழைப்பாளி உத்தமர்களின் வரலாறு. அரசியலோ, அங்கே நடைபெற்ற தேர்தலிலெல்லாம் தமிழர்களே வெற்றி பெற்றுள்ளனர் என்பதை நிரூபித்திருக்கிறது. அங்குள்ள மக்களோ, கம்பம், போடி நாய்க்கனூர் போன்ற தமிழ்ப் பகுதிகளுடன் நீங்காத் தொடர்புகொண்டவர்கள் இந்தக் காரணங்களில் எல்லாக் காரணங்களை வைத்துப் பார்த்தாலும் சரி, எந்தக் காரணத்தை வைத்துப் பார்த்தாலும் சரி—தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டியது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், தமிழகத்துக்குச் சேரவேண்டிய திருப்பதியை "பெரும்பாலானவர் தெலுங்கு பேசுகிறார்கள்' என்று காரணம் சொல்லி ஆந்திரத்தில் இணைக்கும் மாநில புனரமைக் குழு—'கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கொள்ளேகாலம் தாலுகாவில் பெரும்பாலானவர் கன்னடம் பேசுகிறார்கள்; ஆகவே, கன்னடத்துடன் இணைய வேண்டும்' என்று கூறும் குழு—'தென் கன்னட மாவட்டத்திலுள்ள காசர்கோடு தாலுகாவில் பெரும்பாலானவர் மலையாளம் பேசுகின்றனர்; ஆகவே, காசர்கோடு கேரளத்துடன் இணையவேண்டும்' என்று கூறும் குழு—பெரும்பாலான தமிழர்கள் உள்ள தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழகத்துடன் சேரக்கூடாது என்கிறது; இது எந்த நியாயத்தின் அடிப்படையில் என்று சிந்திக்க வேண்டும்

"ஆச்சாரியார் முதலமைச்சராய் இருந்தபோதாவது, சில ஆந்திர நண்பர்களின் பேராசைப் பெருவிபத்துக்கு சென்னை நகரம் பறிபோகாமல் காப்பாற்றினார். ஆனால், இப்போது சந்தர்ப்பவசத்தால் நாடாளும் வாய்ப்

(3 ம் பக்கம் பார்க்க)

திராவிட மாணவர் மாநாட்டினரின் அன்புக் காணிக்கை

‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ. 100 நன்கொடை அளித்தனர்

வரவேற்புக் குழுக் கூட்டம்: வரவு-செலவு விபரம்

சென்னை, நவ. 26—

இன்று மாலை 5-30 மணிக்கு, இராயபுரம் ‘அறிவகத்’தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டுவரவேற்புக் குழுக் கூட்டம் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் டி. கே. பொன்னுவேலு தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் மாறன், சிவப்பிரகாசம், சா. பெ. மலைச்சாமி, மோசஸ், மா. சு. செயவேலன், சு. ஆறுமுகம், எஸ். ருக்மாங்கதன், என். ஆர். இராதா, து. தீ. தயாளன், எம். ஜி. சாமி, க. அறிவழகன், தொ. பாண்டியன், டி. கே. இராசாபாதர், கே. ஏ கிருஷ்ணசாமி, குரு. மாணிக்கம், ச. கணேசன், ச. அரசுமணி, சு. ப. தியாகராசன், உ. பில்லப்பன், ப. மேகநாதன், கி. வ. ஞானசம்பந்தன் ஆகியோர் வந்திருந்தனர். மாநாட்டுப் பொருளாளர் தோழர் மாறன் அவர்களால் வரவு-செலவு கணக்குகள் படிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாநாட்டு வரவு	ரூ.	985—2—0
செலவு	ரூ.	549—8—0
மீதி இருப்பு	ரூ.	435–10—0

இந்த மீதித் தொகை 435–10–0 ரூபாயில், மாநில மாணவர் மாநாட்டின் சார்பில், ரூ. 100 ‘நம் நாடு’ வளர்ச்சிக்கென கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

மீதித் தொகையான 335–10–0 ரூபாயை அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு அவர்களின் மூலம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது.

மேற் கூறப்பட்ட இந்த இரண்டு தீர்மானங்களும் பொருளாளர் மாறனால் முன் மொழியப்பட்டு, அனைவராலும் வழிமொழியப்பட்டு நிறைவேறியது.

இத்துடன், பச்சையப்பன் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் ரூ. 400 தி. மு. கழக மாநில மாநாட்டிற்குக் கொடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மதுரை மாணவர் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் பி. எஸ். மணியன், மோசஸ், பிரசிடென்சி கல்லூரி மாணவர் தோழர் செயவேலன் அவர்களும் தனி அழைப்பின்பேரில் கலந்து கொண்டனர்.

தோழர்கள் பில்லப்பன், விசுவநாதன், மதுரை மணியம், க. அறிவழகன், சு. ஆறுமுகம், சிவப்பிரகாசம், ராஜாபாதர், மலைச்சாமி, கே. எ. கிருஷ்ணசாமி, கணேசன், குருமாணிக்கம், மாறன் ஆகியோர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால ஆக்க வேலைகள் குறித்து பல கருத்துரைகள் வழங்கினர். செயலாளர் பில்லப்பன் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

★

நன்றியறிவிப்பு

தி. மா. மு. கழக 2-வது மாநில மாநாட்டு வரவேற்புக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்கி 20—11—55ல் நடைபெற்ற மாணவர் மாநில மாநாட்டுக்குத் தலைமை தாங்கி சிறப்புற நடத்தித் தந்த திராவிட மாணவர் கழகப் பொதுச் செயலாளரும், தி. மு. க. தலைமை நிலைய செயற்குழு உறுப்பினருமான தோழர் மதியழகன் அவர்களுக்கும், மாநாட்டைத் திறந்து வைத்த பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், சிறப்புச் சொற்பொழிவாற்றிய அண்ணா அவர்களுக்கும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கும் வரவேற்புக் குழு தனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

கம்யூனிஸ்டு எதிர்ப்பு முன்னணி!

இலங்கைப் பிரதமர் யோசனையை சிங்கப்பூர் பிரதமர் நிராகரித்தார்

கோலாலம்பூர், நவ. 28—

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒரு கம்யூனிஸ்டு எதிர்ப்பு முன்னணி அமைக்க வேண்டுமென இலங்கையில் பிரதமர் கொத்தலாவலை தெரிவித்த யோசனை தனக்கு மகிழ்ச்சியளிப்பதாயில்லை என மலேயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான் இங்கு தெரிவித்திருக்கிறார். ‘அது ஒரு ஆபத்தான, புத்திசாலித்தனமில்லாத யோசனையாகும்’ என்று தெரிவித்த தெங்கு ரஹ்மான், இலங்கைப் பிரதமர் அண்மையில் மலேயா வந்திருந்தபோது தம்மிடம் இது குறித்து தம் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

“நான் எதையும் எதிர்ப்பவனாக இருக்கமாட்டேன்; நாம் எல்லாம் சமாதானத்திற்காகப் பாடுபட வேண்டும்; அதைவிடுத்து, ஏதாவது ஒன்றுக்கு எதிர்ப்பு இயக்கம் துவங்கிக்கொண்டிருக்கக் கூடாது” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் மொழிப் பிரச்சினை பரிசீலனை

ஆளும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தைநடத்த பிரதமர்முடிவு

கொழும்பு, நவ. 26—

இலங்கையில் இப்போது நிலவி வருகிற மொழிப் பிரச்சினை குறித்துப் பரிசீலனை செய்யவேண்டுமென்பதற்காக, இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலாவலை, சர்க்கார் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தை வருகிற டிசம்பர் திங்கள் முதல் நாளன்று கூட்ட இருக்கிறாராம்.

கொத்தலாவலை கூட்ட இருக்கும் இந்தக் கூட்டத்தை, நடத்துவதா, வேண்டாமா என்பதைக் குறித்து, கட்சியின் செயற்குழுக் கூட்டம் முடிவு செய்யும் என்று கூறப்படுகிறது.

இலங்கைத் தமிழருக்கும்—சிங்களவருக்குமிடையே ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் இந்த மொழித் தகராறு ஏற்பட்டிருப்பது கண்கூடு!

மதுரை எஸ். முத்து

அவர்களுக்குப் பாராட்டு

20—11—55 மாலை 6 மணிக்கு, மதுரை-கீழ மார்க்கெட் அண்ணா திடலில், நகராண்மைக் கழக உறுப்பினர் தேர்தலில் தோழர் எஸ். முத்து அவர்கள் வெற்றி பெற்றமை குறித்து, மதுரை நகர் தி மு. கழகச் சார்பில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, தோழர் பி. கே. சேதுராமன் தலைமை தாங்கினர். தோழர்கள் சி. பி. சிற்றரசு, அரசுக்கண்ணன், என். எஸ். இராசா, முனியப்பன் ஆகியோர் தோழர் எஸ். முத்து அவர்களைப் பாராட்டி சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் தோழர் முத்து அவர்களுக்கு, பல கிளைக் கழகங்களின் சார்பாகவும், மற்றும் பொதுமக்களின் சார்பாகவும் ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

கே. ஏ. மதியழகன் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புப் பெற்றுள்ள முதலமைச்சர் காமராசரோ, “சென்னை ராஜ்யம் என்ற பெயரே இருக்கட்டும்; இதனை என் ‘தமிழ் நாடு’—‘தமிழகம்’ என்று அழைக்கவேண்டும்?” என்று கேட்கிறார். இப்படிப்பட்டவர்களால் தமிழர் நலன் பாதுகாக்கப்படும் என்று நீங்கள் மனதாரக் கருதுகிறீர்களா? மார்த்தாண்டம் என்ற இடத்தில் பட்டம் தாணு பிள்ளை அடக்குமுறையால் பனிரெண்டு தமிழர்கள் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியாகி பிணமாக வீழ்ந்த நேரத்தில், வழக்கம் போல் வாய்மூடி மௌனியாக இருந்த ஒரு சர்க்காரிடம் நாம் எதுவும் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. தோழர் விநாயகம் பேசும் போதுகூடக் குறிப்பிட்டார்—‘வேறு நாடுகளாக இருந்தால் இவர்களை உலவ அனுமதிப்பார்களா? இந்த அறிக்கையைக் கொளுத்தினால்கூடத் தவறில்லை’- என்று. அவர் கூறியதிலே என்ன தவறு என்று எனக்குத் தெரியவில்லை. கம்யூனிஸ்டுத் தோழர் கலியாணசுந்தரம் சொன்னார்; “எய்தவனை விட்டு விட்டு அம்பை நோவானேன்?” என்று! ‘அறிக்கையை ஏன் கோபிக்கவேண்டும்? அதற்குக் காரணமான மத்திய சர்க்காரிடம் நமது எதிர்ப்பு திரள வேண்டும்’ என்றார்!

‘எய்தவனை விட்டுவிட்டு அம்பை நோவானேன்? என்பது தமிழ் நாட்டிலே நெடுநாளாக இருக்கிற பழமொழி; பழமொழிக்குப் பலர் அர்த்தம் பார்ப்பதில்லை. மற்றவர் பார்க்காவிட்டால் பரவாயில்லை. நண்பர் கலியாண சுந்தரமோ மார்க்ஸின் போதனையையும், லெனினின் சித்தாந்தத்தையும், ஸ்டாலினின் தத்துவத்தையும் கலந்து விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு எதனையும் நோக்குபவர். இப்போது அம்பு எவர் மார்பிலும் எறியப்பட்டுவிடவில்லை. வேடனின் அம்புறாத் தூணியிலே அம்பு இருக்கிறது; வெண்புறா பறக்கிறது; வேடன் உலவிக் கொண்டிருக்கிறான். ‘அம்பை முறித்து எறி’ என்கிறார் நண்பர் விநாயகம்; நண்பர் கலியாணசுந்தரம் கட்சியினர் ‘ஆயுதப் பரிகரணம்’ பற்றி அடிக்கடி பேசுகிறார்கள். ‘அணுகுண்டை அழியுங்கள்,—நீர்வளிக் குண்டை அழியுங்கள்’ என்று சொல்லுகிறார்களே தவிர, ‘அமெரிக்காக்காரனை அழியுங்கள்’ என்று சொல்வதில்லை. ‘கொளுத்துங்கள்’ என்று சொன்னால், அது சாம்பலானவுடனேயே எல்லாம் சரியாகிவிடும் என்று பொருள்பட்டுவிடும்? நமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு அதுவும் ஒரு வெளிப்படை அம்சம்; அவ்வளவுதான்.

“இவர்கள் கொளுத்தும் கட்சிக்காரர்கள்; எதை வேண்டுமானாலும் கொளுத்துவார்கள்; ஆகவேதான், ‘அது சரி’ என்று சொல்லுகிறேன்—என்று நீங்கள் எண்ணக்கூடும். நாங்கள் கொளுத்தினாலாவது ‘இவர்கள் எதையும் கொளுத்துவார்கள்; இதிலென்ன அதிசயம்,’ என்று பலர் நினைக்கக் கூடும். மைலாப்பூர் வாசிகளும், மதிவாணர்களுமாகிய நீங்கள் நாலு பேர் இதைக் கொளுத்தினால், ‘இவர்களே இதைச் செய்யவேண்டிய அளவிற்கு கொடுமை நிறைந்ததா’ என்பதை உணர்ந்து, ஆட்சிபீடத்திலிருப்போர், நமது நலனில் அக்கரை செலுத்தக் கூடும்.”

தலைமைக் கழகம் அறிக்கை—31/55

தி. மு. கழக உறுப்பினர் சேர்த்தல்

1955 டிசம்பர்—1956 சனவரி

ஆகிய இரண்டு திங்களும்

உறுப்பினர் சேர்க்கும் காலமாகும்

(1) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் உரிய காலமாக, 1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

(2) இப்பொழுதுள்ள உறுப்பினர்கள் 1956 சனவரித் திங்கள் 31-ம் நாளுக்குள் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்குள் புதுப்பித்துக் கொள்ளாவிட்டால், 1956 பிப்ரவரி 1-ஆம் நாளிலிருந்து தி. மு. கழக உறுப்பினர் தகுதியை அத்தகையோர் இழந்துவிட்டதாகக் கருதப்படுவர். அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குப் பழைய உறுப்பினர் தகுதி சேர்த்துக் கணக்கிடப்படமாட்டாது; புதிய உறுப்பினர் என்றமுறையிலேயே நோக்கப்படுவர்.

(3) உறுப்பினரைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டக் கழகங்களிலிருந்து அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) கிளைக் கழகம் தோற்றுவிக்கக்கூடிய, ஆனல் இதுவரையில் தோற்றுவிக்காத இடத்தில் (சிற்றூர் அல்லது பேரூர் அல்லது நகரம்) முக்கியமான ஒருவர் பொறுப்பாளராக இருந்து விண்ணப்பத் தாளை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்று, உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ளலாம்.

(5) கிளைக் கழகம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் வேண்டும். கிளைக் கழகம் அமைக்க முடியாத இடத்திலுள்ளவர்கள், பக்கத்திலுள்ள ஏதேனும் ஒரு கிளைக் கழகத்தில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொள்ளலாம்.

(6) கிளைக் கழகச் செயலாளரும், கிளைக் கழகம் இல்லாத ஆனல் அமைக்கக்கூடிய இடத்தில் முக்கிய பொறுப்பாளருந்தான் உறுப்பினர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

(7) ஒவ்வொரு விண்ணப்பத் தாளிலும் இருபத்தைந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யலாம். ஒவ்வொரு கிளைக் கழகமும் எவ்வளவு உறுப்பினரைத் தம் ஊரில் சேர்க்கமுடியும் என்று எண்ணுகிறதோ அவ்வளவு உறுப்பினருக்குத் தேவையான பதிவுத் தாள்களை மாவட்டக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(8) ஒவ்வொரு உறுப்பினரும், உறுப்பினர் கட்டணமாக அணா 8 செலுத்த வேண்டும்: ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் எட்டு அணாவில் நான்கு அணாவைக் கிளைக் கழகம் வைத்துக்கொண்டு மீதி நான்கு அணாவை நேரே தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாவட்டக் கிளைக்குச் சேரவேண்டிய தொகையைத் தலைமைக் கழகம் பிறகு கணக்குப் பார்த்து அந்தந்த மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

(9) உறுப்பினர் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத் தாளையும், தலைமைக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் (பாதிக் கட்டணத் தொகை) பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13 என்ற முகவரிக்கு கிளைக் கழகச் செலவில் அப்படியே அனுப்பிவைக்க வேண்டும்.

(10) விண்ணப்பத் தாளும், கட்டணத் தொகையும் வந்து சேர்ந்தவுடன் உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் தலைமைக் கழகத்தால், கிளைக் கழகத்தின் மூலம் உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பெறும். உறுப்பினர் உரிமைச் சீட்டை, உறுப்பினர், சான்றுக்காக என்றென்றும் வைத்துக் காப்பாற்றி வைக்க வேண்டும்.

(11) கிளைக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும், மாவட்டக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும் அவ்வப்போது அனுப்பிவைக்கப்பெறும்.

(12) எந்தக் கிளைக் கழகத்திலும் தொடர்புகொள்ள விருப்பமில்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் என்ற அளவிலேயே இருக்க விரும்புபவர்கள் தங்கள் பெயர், முகவரி, முன்பு உறுப்பினரா, அல்லவா என்ற விவரம் ஆகியவைகளைக் குறித்துக் கையெழுத்துப் போட்ட முடங்கலை எட்டு அணாவுடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அத்தகையோருக்கு உறுப்பினர் உரிமைச் சீட்டு தலைமைக் கழகத்தால் அனுப்பிவைக்கப்பெறும்.

(13) பின்னால் எப்பொழுதாவது ஒரு கிளைக் கழகத்திலிருந்து மற்றொரு கிளைக் கழகத்திற்குத் தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள், தனியே நான்கு அணாவைத் தலைமைக் கழகத்திற்குச் செலுத்தி மாற்றிக் கொள்ளவேண்டும்.

(14) எந்தக் கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தக் கூடாது. உறுப்பினர் சேர்க்கும் பணி மட்டுந்தான் இப்பொழுது நடைபெற வேண்டும்.

(15) பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்—பெண்கள் மட்டுமே தி. மு. கழகத்தில் உறுப்பினராகும் தகுதியடைந்தவராவர். மாணவர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராக வேண்டாம். அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

“அறிவகம்,”
சென்னை–13
21-11-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

ரஷ்யத் தலைவர்களுக்கு மாபெரும் வரவேற்பு

வெள்ளம்போல் மக்கள் கூட்டம்

சென்னையில் கண்கொள்ளா காட்சி

சென்னை, நவ. 28—

இன்று பிற்பகல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், சோவியத் ரஷ்யத் தலைவர்கள் மார்ஷல் புல்கானினும், குருஷ்சேவும் வந்துசேர்ந்தார்கள்.

மீனம்பாக்கம் விமான நிலையம், இதுவரை என்றுமில்லாத முறையில் கண்ணைக் கவரும் வகையில் அழகு செய்யப்பட்டிருந்தது.

தலைவர்கள் விமானத்தினின்றும் இறங்கியதும், கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் அவர்களை மகிழ்வுடன் வரவேற்கும் முகத்தான் பெருத்த ஆரவாரப் பேரொலி எழுப்பினர்.

விமான நிலையத்தில் பச்சைப் பசேலெனத் தோரணங்களும், அத்தோரணங்களை அழகுபடுத்தும் வகையில் மலர்களும் தூவப்பட்டு இந்திய, ரஷ்ய தேசியக் கொடிகளால் மிக அலங்காரமாக வளைவுகள் கட்டப்பட்டிருந்தன.

விமான நிலையத்திற்குள் செல்லவிடாதபடி பலத்த பாதுகாப்புக்கள் செய்யப்பட்டிருந்தும்கூட, திரள் திரளான மக்கள், விமான நிலையத்திற்குள் நுழைந்து, 'பால்கனி'யிலெல்லாம் ஏறிவிட்டனர்.

விமானத்திலிருந்து இறங்கியதும், ரஷ்யத் தலைவர்களிடம் கவர்னர் பிரகாசா, 'தங்களது உதக மண்டலம் சுற்றுப்பயணத்தை மிக்க மகிழ்வுடன் களித்திருப்பீர்கள் என நம்புகிறேன்' என்றார்; உடனே மார்ஷல் புல்கானின், 'அந்த இடத்திற்குச் சென்றதில் நாங்கள் மிகவும் மகிழ்வுறுகிறோம்; அந்த இடம் மிகவும் அருமையான இடம்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

அங்கு, இந்திய விமானப் படை 'யூனிட்' சார்பில் ரஷ்யத் தலைவர்களுக்கு அணிவகுப்பு மரியாதை தெரிவித்துக்கொள்ளப்பட்டது. ரஷ்ய—இந்தியத் தேசியக் கொடிகளின்கீழ் அவர்கள் நின்றுகொண்டிருக்கையில், ஐ. ஏ. எப். வாத்தியக் குழுவினர் ரஷ்ய—இந்தியத் தேசிய கீதங்கள் முழங்கினர்.

தேசிய கீதம் முடிவுற்றதும் அவர்கள், இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு விட்டு,பின்னர், முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள், பிரதமநீதிபதி, மேல் சட்டசபைத் தலைவர், கீழ் சட்டசபை சபாநாயகர், நகரசபை மேயர், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோருடன் கைகுலுக்கினர்.

விமான நிலையத்தில் வரவேற்பு மரியாதைகள் முடிவுற்றதும், அவர்கள் 'ராஜபவன'த்திற்குத் திறந்த மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டனர். விமான நிலையத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த மக்கள் கூட்டம் அவர்களைக் கண்டதும் பெருத்த ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

அவர்களை ஏற்றிச்சென்ற கார் செல்ல முடியாத அளவிற்கு சாலையின் இருமருங்கிலும் மக்கள் கூட்டம் கடல் வெள்ளம்போல் திரண்டிருந்தது. ஆயிரமாயிரம் பள்ளிச் சிறுவர்களும்—சிறுமியர்களும் பாதையோரங்களில் நின்றுகொண்டு, தலைவர்கள் மீது பூக்களை எறிந்தும், சிறு கொடிகளைக் காட்டியும் மகிழ்ந்து வரவேற்றனர்.

சாலைகள் நெடுக சென்னை நகர் (?) களால் கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகளில் 'இந்திய—சோவியத நட்புறவு வளர்க;' என்ற வார்த்தைகள் ரஷ்ய, தமிழ், இந்திமொழிகளில் எழுதப்பட்டிருந்தன.

சோவியத் தலைவர்களின் வருகைக்காக நெடுநேரமாகச் சாலைகளில் பல வசதிக் குறைவுகளினூடே காத்துக்கொண்டிருந்த போதிலும், மக்கள், மிகவும் நல்ல முறையில்—பாராட்டப்படக்கூடிய அளவில் நேர்மையுடன் நடந்துகொண்டுள்ளனர்.

சரியாக 12-40 மணிக்கு சோவியத் தலைவர்கள், கிண்டி ராஜ பவனத்தை அடைந்தனர்; தலைவாயிலிலிருந்து கடைசிவரையிலும் ராஜ்பவன சிப்பந்திகள், பள்ளிச் சிறுவர்கள் ஆகியோர், பாதையின் இருபுறங்களிலும் நின்றுகொண்டு ஆரவாரம் எழுப்பி சோவியத்—இந்தியக் கொடிகளைக் காட்டி வரவேற்றனர்.

ராஜபவனத்திற்குள் நுழைந்ததும், அவர்களை வரவேற்கும்வகையில் திருவிடைமருதூர் வீருசாமியின் நாதசுவர முழக்கம் ஒலிக்கப்பட்டது; அவர்கள் காரிலிருந்து இறங்கியதும், சென்னகேசவப் பெருமான் கோவில் பூரணகும்பம் கொடுக்கப்பட்டு வரவேற்கப்பட்டனராம். சென்னை மிருகக்காட்சி சாலையைச் சேர்ந்த இரண்டு யானைகள் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டு, புல்கானினுக்கும், குருஷ்சேவுக்கும் மலர்மாலைகள் போட்டு வரவேற்றனவாம்.

உள்ளே சென்றதும், இருவருக்கும் பிரகாசா இளநீர் கொடுத்துக் களைப்பாற்றியிருக்கிறார்.

அவர்களுக்குத் தரப்பட்ட உணவில், சில குறிப்பிட்ட இந்திய உணவுகள்—தயிர்வடை, பால் போளி—அரிசி உணவு ஆகியவைகளும் அடங்கியிருந்தனவாம்!

மாபெரும் வரவேற்பு

இதுவரையிலும் இந்தியாவிற்கு வந்துள்ள எவருக்கும் கொடுத்திராத மகத்தான வரவேற்பினை சென்னை நகர மக்கள் மார்ஷல் புல்கானினுக்கும், குருஷ்சேவுக்கும் தந்திருக்கின்றனர்.

ஐலண்ட் மைதானத்தில் மட்டும் 5 முதல் 6 இலட்சம் மக்கள் திரண்டனர். ரஷ்யத் தலைவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட வழிகளான மவுண்ட்ரோடு, மற்றுமுள்ள பாதைகளில் கூடியிருந்த மக்கள் திரளைப் பார்த்தால், நகர் முழுமையிலுமுள்ள இடங்களிலுள்ள மக்கள் அனைவரும் இந்த இடங்களில் குழுமினரோ என்றுகூட ஐயுறும் நிலை ஏற்பட்டது!

நகர மக்களைத் தவிர சுற்றுப்புற வட்டாரங்களிலிருந்தும், வடக்கே விஜயவாடா வரையிலிருந்தும், தெற்கே மதுரை வரையிலிருந்தும் மக்கள் வந்திருந்தனர். வெளியிடங்களிலிருந்து சென்னைக்கு வந்த இரயில், பஸ் வண்டிகள் அனைத்தும் மக்களால் நிரம்பி வழிந்தது.

ராஜபவனத்தில் சிறிது நேரம் ஓய்வு பெற்றுக்கொண்ட ரஷ்யத் தலைவர்கள், பின்னர், ராஜபவனத்திலிருந்து புறப்பட்டு, மவுண்ட் ரோடு, ஆரிஸ் ரோடு, புரசைவாக்கம் வழியாக பெரம்பூர் கோச் தொழிற்சாலைக்குச் சென்றனர். கவர்னர் பிரகாசாவுடன் அவர்கள் இருவரும் திறந்த மோட்டாரில் அமர்ந்து, 10 மைல் தூரத்திற்கு நகரைச் சுற்றி பெரம்பூர் சென்றனர்.

வழி நெடுகிலும், வரவேற்புத் தட்டிகளும், வளைவுகளும் கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப் பெற்றிருந்தன.

குறிப்பாக மவுண்ட் ரோடில், ஆயிரம் விளக்கிலிருந்து மவுண்ட் டாரூ (?) வரைக்கும், மக்கள் கூட்டம் திரளாகக் கூடியிருந்தது. மவுண்ட் ரோடு—வாலாஜாரோடுசந்திப்பின் நடுவிலுள்ள மேடையின் மீது அமைக்கப்பட்டிருந்த பந்தலில் அமர்ந்துகொண்டிருந்த இசைக் குழுவினர், அவர்களை வரவேற்கு முகத்தான் இசை விருந்தளித்துக் கொண்டிருந்தனர்.

அப்பகுதி வழியே அவர்கள் சென்றுகொண்டிருந்தபோது, கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தைச் சமாளிக்கப் போலீசார் மிகக் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டது இதற்குள் ரஷ்யத் தலைவர்கள் ஏறிச் சென்ற கார் முழுவதும் பூமாலைகளாலும், பூச்செண்டுகளாலும் நிரம்பி வழிந்தது!

மிக உற்சாகமாகக் காணப்பட்ட குருஷ்சேவ், புன்முறுவல் பூத்த முகத்துடன், அந்த மலர்மாலைகளையும், பூக்களையும் வழியில் நின்றுகொண்டிருந்த மக்களை நோக்கி வீசினர்!

வழியில், ஜெமினி ஸ்டுடியோ சார்பில் கொத்தமங்கலம் சுப்பு, தென்பகுதி இரயில்வே இன்ஸ்டிட்டியூட் சார்பில் சின்னப்பா, பிரபல நடனமணிகள் லலிதா, பத்மினி, ராகினி, தங்கமணி, கோபிநாத் ஆகியோரும், மற்றும் பல பிரதிநிதிகளும் மாலைகளையும் சரிகை வேய்ந்த துணிகளையும் அணிவித்தனர்.

பெரம்பூர் கோச் வண்டித் தொழிற்சாலையை, ரஷ்யத் தலைவர்கள் இருவரும் 1 மணி நேரம் பார்வையிட்டுவிட்டு,பின்னர் திரும்பும் வழியில், சிறுவர் வரவேற்பிற்காக எழும்பூர் நகரசபை ஸ்டேடியத்திற்குச் சென்றனர். அங்கு: சிறுவர்—சிறுமியர்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்திருந்தன. மக்கள் கூட்டத்தைச் சமாளிப்பது முடியாமற் போனமையையொட்டி, சில பல நிகழ்ச்சிகள்கூட கைவிடப்பட்டன.

அங்கிருந்து மறுபடியும், நகரசபைக் கட்டிடம். சென்டிரல் இரயில் நிலையம், பொது மருத்துவமனை ஆகியவற்றைக் கடந்து ஐலண்ட் மைதானத்தை அடைந்தனர்.

நகரசபைக் கட்டிடம் தென்பகுதி இரயில்வே அலுவலகம், சென்டிரல் இரயில் நிலையம் ஆகியவைகள் கண்ணைக்கவரும் வகையில் பல வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வரவேற்புக் கூட்டம் நடைபெற்ற இடமான ஐலண்ட் மைதானம், ஒரு பெருந்தீவு போலக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. மைதானத்தைச் சுற்றிலும் கண்ணொளியைப் பறிக்கும் வகையில் மின்னொளி வீசிக்கொண்டிருந்தது. சாலை நெடுகிலுமுள்ள மரங்கள் ஒவ்வொன்றிலும் ஆயிரம் ஆயிரமான பல வண்ண விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

மேடை மீது ரஷ்யத் தலைவர்கள் ஏறியதும் கூடியிருந்த மக்கள் பெருவெள்ளம் எழுப்பிய கையொலி காது செவிடுபட வைத்தது!

ஆரவார வரவேற்பிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ரஷ்யத் தலைவர்கள் இருவரும் தங்கள் கைகளைக் கூப்பியும், தலை அணிகளை அசைத்தும் வரவேற்பினை ஏற்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சோவியத் ரஷ்யத் தலைவர்களுக்குப் பரிசாக, பல நிறுவனங்கள்,தனிப்பட்டோர் சார்பில் எண்ணிலடங்கா பொருட்கள் கிடைத்திருந்தன.

நகரசபை மேயர் திரு. எம். ஏ. சிதம்பரம் அவர்கள், ரஷ்யத் தலைவர்களை வரவேற்று, தமிழில் வரவேற்பு இதழ் ஒன்றை வாசித்து, அதனைப் பின்னர், தென்னிந்தியக் கோபுரங்கள் அடங்கிய ஒரு கோவில்போல் செய்யப்பட்டிருந்த வெள்ளிப் பெட்டியினுள் வைத்துக் கொடுத்தார்.

பின்னர், மார்ஷல் புல்கானின், —குருஷ்சேவ் ஆகிய இருவரும் ரஷ்ய மொழியில் பேசினர். அவர்களது பேச்சுக்கள் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், பின்னர் தமிழில் மொழி பெயர்த்தும் மக்களுக்கு கூறப்பட்டது.

இறுதியில் சோவியத், இந்திய தேசியக் கீதங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

கூட்டம் முடிவுற்றதும் பலவகையான வாணவேடிக்கைகளும், மற்றும் பலவும் கண்கவர் வகையில் நிகழ்ந்தன.

பின்னர், சோவியத் தலைவர்கள் பாண்ட் பிராக்டிஸ் ரோடு, மெரினா வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மெரினாவிலுள்ள மேரி மகாராணி கல்லூரியை அடைந்ததும், கல்லூரி தலைவி ஜராவதி, கல்லூரி மாணவியர் ஆகியோரால் வரவேற்கப்பட்டனர். மாணவிகள் சார்பில் மாணவத் தலைவி, செயலாளரான தாராஜேக்கப், ரூப்லேட்டா ஆகியோர் மலர்மாலைகள் அணிவித்தனர்.

சிறிது நேர இடைநேரத்தில், கல்லூரி மாணவிகள் இசை நிகழ்ச்சி ஒன்றும் நடத்தியிருக்கின்றனர்!

அடுத்து பிரஸிடென்ஸி கல்லூரி வழியாகச் செல்லும்போதும், கல்லூரி மாணவர்கள் திரளாகக் கூடியிருந்து வரவேற்றனர்.

பின்னர் அவர்கள் ஆடம்ஸ் ரோடு வழியாகத் திரும்பி, மவுண்ட் ரோடு, ஆயிரம் விளக்கு வழியாக ராஜ பவனத்திற்குத் திரும்பினர்.

இரவு, ராஜபவனத்தில் ரஷ்யத் தலைவர்களுக்கு, சென்னை கவர்னரால் விருந்தொன்று அளிக்கப்பட்டது. விருந்திற்குப் பின், திருமதிகள் சந்திரலேகா, சாயி—சுப்புலட்சுமி ஆகியோரின் நடன நிகழ்ச்சிகளும், திருமதி எம். எல். வசந்தகுமாரியின் இசையரங்கும் நடைபெற்றது.

காலனி ஆதிக்கத்திற்குக் கண்டனம்

கோவா விடுதலைக்கு புல்கானின் வழங்கும் ஆதரவு

சென்னை, நவ. 28—

"இந்திய மண்ணில் கோவாவில் போர்ச்சுகீசிய காலனி ஆதிக்கம் நீடிப்பதற்கு எந்தவித நியாயமும் இல்லை; நாகரீகமுற்ற உலக மக்கள் வெட்கப்படவேண்டிய ஒன்ருகும்,"

என்று, சோவியத் பிரதமர் புல்கானின், சென்னை ஐலண்டு மைதானத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"காலனி ஆதிக்கம் வெகு வேகமாக நிலை இழந்து வருகிறது என்பதை ஐரோப்பிய நாடுகள் சில, உணராமலிருக்கின்றன" என்றும் புல்கானின் குறிப்பிட்டிருக்கிருர்.

தனக்குத் தரப்பட்ட மிகப் பிரம்மாண்டமான வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய ரஷ்யப் பிரதமர் புல்கானின், காலனி ஆதிக்க யுகம் இனியும் திரும்பப் போவதில்லை என்பதை மேலை நாடுகள் உணரவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிருர்.

காலனி ஆதிக்கத்தையும், அதன் எச்ச சொச்சத்தையும் எதிர்த்துப் போராடும் மக்களுக்கு உறுதுணைவர்களாக சோவியத் மக்கள் என்றென்றைக்கும் இருப்பார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

"சென்னை, அதன் தொன்மை வாய்ந்த கலாச்சாரத்திற்குப் பெயர்போனது என்பது எங்களுக்குத் தெரியும்; கடந்த நூற்றண்டுகளில் உங்கள் மாநிலத்தில் எழுப்பப்பட்டுள்ள இணையற்ற—ஆச்சரியமான சிற்பக் கலைத் திறன் படைத்த கட்டிடங்கள், உங்களது சிற்பிகள், மாளிகை அமைப்பாளர்கள் ஆகியோரின் உயர்ந்த திறனுக்கு எடுத்துக்காட்டாகும்; இந்தியாவின் கலாச்சார—பொருளாதார வாழ்க்கையில், சென்னை, ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால், இந்த வளங்களை எல்லாம் உற்பத்தி செய்கிற இந்த மாநில மக்களே, மாநிலத்தின் ஒப்பற்ற செல்வமாகும்."

தோழர் குருஷ்சேவ் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"எங்களுடைய அனுபவத்திலிருந்து உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்; சுதந்திரம் பெற்றுவிடுவது மட்டும் பெரிதல்ல—போதுமானதல்ல; பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றுவதுதான்—பாதுகாப்பதுதான் பெரிது.

"சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்பது நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்குவதும் மக்களுக்கு மகிழ்ச்சியை — வளமான வாழ்வைப் பெற்றுத் தருவதுதான் என்று கருதுகிறேன். எங்கள் மக்கள், அவர்கள் வழியிலேயே சென்று, அந்த இலட்சியத்தை அடைந்துவிட்டனர். நீங்கள் உங்களுக்கு விருப்பமான வழியைத் தேர்ந்தெடுத்து, அந்த வழியில் இந்த இலட்சியத்தைப் பெற முயன்று கொண்டிருக்கிறீர்கள்; ஆனால், உங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க நீங்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சியிலும், சோவியத் மக்கள் உங்களுடன் இருப்பார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

டாக்டர் பி. வரதராசுலு பிறந்த நாள் விழா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் டாக்டர் நாயுடுவைப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ எஸ். கிருஷ்ணசாமி, டாக்டர் நாயுடுவின் உருவப் படம் ஒன்றைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தியிருக்கிருர்.

சர்தார் பணிக்கரைத் தலைவராகக் கொண்ட டாக்டர் நாயுடு பிறந்த நாள் விழாக் குழுவின் பொருளாளர் கே. சுப்பிரமணியம், டாக்டர் நாயுடுவுக்கு பணமுடிப்பு வழங்குவதற்குப் பதிலாக பல்லாவரத்தில் வீடு ஒன்று வாங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

'டாக்டர் நாயுடு நீண்டகாலம் வாழ்ந்து நாட்டிற்கு நல்ல பல பணி புரியவேண்டும்,' என்று குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதா கிருஷ்ணன், கவர்னர் பிரகாசா, பட்டாபி சீதாராமையா, குமாரசாமி ராஜா, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணுதுரை ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

விழாவிற்கு ஏராளமான பொது மக்கள், பல கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வந்திருந்தனர்.

விழாவில் திரு. வி. வி. இராமசாமி, துறையூர் ரங்கசாமி, டி. சண்முகம், டி. கிருஷ்ணமூர்த்தி, (குத்தூசி) எஸ். குருசாமி முதலானேரும் கலந்துகொண்டனர்.

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து, நாட்டிற்கு நல்ல பல பணிபுரிய வேண்டும் என்று நாம் நமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். (ஆ.-ர்.)

கொடியேற்றல்

19—11—55 அன்று சென்னை வண்ணை தி. பெரியசாலை தியாகராயர் கல்லூரி அருகில் 131 எண் இல்லக் கொடி மரத்தில் இளர் தென்றல் முயற்சியாலும், தோழர் கு. பலராமன உதவியாலும் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.